[2009 ஜூலை 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், நீங்கள் சொன்னவையெல்லாம் அவைக் குறிப்பிலே பதிவாகியிருக்கின்றன.

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) இலங்கைத் தமிழர்களுக்கு வாழ்வுரிமை பெற்றுத் தருதல், மருந்து மற்றும் உணவு வசதிகளை ஏற்படுத்தித் தருதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு இரண்டு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எடுத்துக்கொள்ளப்படும். இலங்கையில் போர் முடிவிற்குப் பின்பு தமிழர்களுக்கு வாழ்வுரிமையைப் பெற்றுத் தருவதோடு, மருந்து மற்றும் உணவு போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றவிருக்கிறார்கள். அடுத்து, நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்றவிருக்கிறார்கள்.

முதலில், இலங்கைப் போர் முடிவிற்குப் பிறகு, தமிழர்களுக்கு வாழ்வுரிமையைப் பெற்றுத் தருவதோடு, மருந்து மற்றும் உணவு போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. டி. சுதர்சனம், திருமதி டி. யசோதா, திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், திரு. சி. ஞானசேகரன், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. அ. தமிழரசு, திரு. தி. வேல்முருகன், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. தி. இராமசாமி ஆகியோர் விதி *55* மற்றும் *56*-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்துச் சுருக்கமாக, அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு தீர்மானங்கள் இது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறோம்.

2009 ஜூலை 1]

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் பேசுவதை நீங்கள் ஏன் நிறுத்துகிறீர்கள்? திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** கடந்த மே மாதம் 19 ஆம் தேதி இலங்கையிலே நடந்த போர் முடிவிற்கு வந்தது என்று இலங்கை அரசு அறிவித்தது. போர் முடிவிற்குப் பிறகு, நம் கண்கள் எல்லாம் குளமாகின்ற அளவிலே, நம்முடைய உணர்வுகள் எல்லாம் துடிக்கின்ற வகையிலே, நம்முடைய தொப்புள் கொடி உறவுகள், நம் தமிழினத்தைச் சார்ந்த தமிழ்க் குடிமக்கள், வாழ்வினுடைய அடிப்படை உரிமைகளுக்காக, அடிப்படை வசதிகளுக்காக, இவை எல்லாவற்றையும்விட, மனிதனாக மாண்புடன் வாழமுடியுமா என்கிற கேள்வியோடு, அந்த மண்ணிலே அங்கலாய்ப்புடன், அழுகையுடன், எதிர்காலத்தைப்பற்றிய நிறைந்த சந்தேகங்களுடன், தங்கள் வாழ்க்கையில் மீண்டும் வெளிச்சம் வருமா என்கிற ஏக்கத்தோடு, 3 இலட்சம் தமிழர்கள் புலம் பெயர்ந்து, இடம் பெயர்ந்து, சாதாரணக் கட்டாந்தரையில், எந்தவிதமான, சூரியனுக்கோ, மழைக்கோ, காற்றுக்கோ பாதுகாப்பு இல்லாமல் வாழ்கிறார்கள் என்கிற செய்தி நம்மை வந்தடைந்தபோது, நாம் உள்ளபடியே துடித்துப் போனோம்.

நம்முடைய மத்திய, மாநில அரசுகள் தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதற்காக விரைந்தார்கள் என்பதிலே நமக்கு மாற்றுக் கருத்து இல்லை. பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, 500 கோடி ரூபாயை உடனடியாக அளித்து, புலம் பெயர்ந்து, இடம் பெயர்ந்திருக்கின்ற தமிழர்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதற்காகச் செய்த ஏற்பாட்டை நாம் மறந்துவிடவில்லை.

முற்பகல் 11-05

ஆனால், இன்று வருகின்ற செய்திகள் நமக்கு மன நிறைவைத் தரவில்லை. நம்முடைய மத்திய உள் துறை அமைச்சர்கூட, தமிழர்களுக்குச் செய்து தரப்படுகின்ற வசதிகள், தமிழர்களை இலங்கை அரசு நடத்துகின்ற விதம் தனக்கு திருப்திகரமாக இல்லை என்று மத்திய அரசினுடைய உணர்வுகளையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜூலை 1

அந்த உணர்விலே நமக்கு மாற்று இல்லை. அங்கேயிருக்கின்ற தமிழர்களுக்கு சம உரிமை பெற்ற வாழ்வினைத் தேடித்தர வேண்டும். புலம் பெயர்ந்து, நிர்கதியாக நிற்கின்ற அவர்களுக்கு பாதுகாப்பான இடங்களை மீண்டும் பெற்றுத் தரவேண்டும். அவர்களை மீண்டும் அவர்களுடைய சொந்தக் குடியிருப்புகளிலே குடியமர்த்தி, அவர்களை மனிதர்களாக, மாண்போடு வாழ்வதற்கு நாம் இங்கேயிருந்து நம்முடைய நேசக் கரத்தை நீட்ட வேண்டும் என்று சொல்வதற்காகத்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தினைக் கொடுத்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இலங்கை அரசைப் பார்க்கின்றபோது, அவர்களுடைய சூழ்நிலையைப் பார்த்தால், இந்த மிகப் பெரும் பணியைச் செய்யக்கூடிய சக்தி அவர்களுக்கு இருக்கிறதா என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது. கடந்த 50 ஆண்டுகளாக பல்வேறு கட்டங்களிலே, உள்நாட்டுப் போரினால், பயங்கரவாதத்தைச் சமாளிக்க வேண்டிய நெருக்கடியால், அங்கே ஏற்பட்டிருக்கின்ற உள்நாட்டுக் குழப்பத்தால், அவர்களுடைய நிதிநிலையாதாரங்கள் முழுவதும் வறண்டு இருப்பதாக அந்த நிதிநிலை அறிக்கைகள் சொல்கின்றன. வாங்கிய கடனைக்கூட திரும்பச் செலுத்த முடியாத இலங்கை அரசு, அவர்களுடைய தொழில், வாணிபம் முழுவதும் நசிந்துபோன நிலையிலே இந்த 3 இலட்சம் மக்களுக்கான ஆதார வசதிகளை ஏற்படுத்தித் தரக்கூடிய நிதி வசதி அவர்களுக்கு இருக்கிறதா என்றால், நாம் தயாராகச் சொல்ல முடியும், அவர்களுக்கு அந்த வசதி இருக்காது. இருப்பதற்கான வாய்ப்பு இல்லை. ஆனால், அதற்கான அரசியல் உறுதி இருக்கிறதா; Political will, அது நாம் கேட்க வேண்டிய கேள்வி. ஆனால், அங்கே இருக்கின்ற தலைவர்கள் பேசுகின்ற அந்தத் தகவல்கள், நமக்கு ஓரளவு ஆதரவைத் தந்தாலுங்கூட, இலங்கை அரசினுடைய குடியரசுத் தலைவர் ராஜபக்சே அவர்கள், "என்று இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்களுடைய நெஞ்சங்களில் நம்பிக்கை உணர்வு வளர்கிறதோ, அன்றுதான் இந்தப் போர் உண்மையான வெற்றி" என்று அவர் சொன்ன அந்த வார்த்தைகளினுடைய அர்த்தத்தை நாம் உணர்ந்துகொண்டிருக்கிறோம்.

ஆனால், இன்று சிங்கள மக்கள் மத்தியிலே என்ன உணர்வு இருக்கிறது? தமிழ் பேசுகின்ற மக்கள் மத்தியிலே என்ன உணர்வு இருக்கிறது? மீண்டும் அவர்களுக்கான அந்த நல்ல நம்பிக்கையும், நல்ல உறவும் எப்போது வளரும் என்பதை நாம் ஆராய்ந்து

2009 ஜூலை 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பார்க்கின்றபோது, சில இடங்களிலே நமக்கு நெஞ்சில் பொறி தட்டுகிறது. நமக்கே சற்று கவலை தருகிறது. விடுதலைப் புலிகளின் தலைவராகிய பிரபாகரன் அவர்கள் இறந்துபோனார் என்பதே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு என்று அவர்கள் நினைப்பார்களென்று சொன்னால், இலங்கையிலே இருக்கின்ற இலங்கை அரசும், சிங்களர்களும் மிகப் பெரிய வரலாற்றுத் தவறைச் செய்கிறார்கள் என்பதை நாம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறோம்.

அந்தத் தீவிரவாதத்தையும், பயங்கரவாதத்தையும் நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தவிர, அந்த நாட்டு மக்கள் மத்தியிலே இருந்த குழப்பங்களுக்கான காரணம், அங்கே ஏற்பட்ட இன வெறி, அங்கே தமிழர்களுக்கு சரியான நெறிமுறைகளைக் காட்டாதது மட்டுமல்ல, அவர்களுக்கு முறையான வாழ்வையும், சம உரிமையையும் அளிக்காததுதான் அந்தத் தீவு நாடு, கடந்த 50 ஆண்டுகளாக இதைப்போன்ற பிரச்சினையில் உழல்கிறது என்பதை அவர்கள் ஒத்துக்கொள்ளவேண்டும். எனவே, என்று தமிழர்களுக்கு சம உரிமை தரப்படுகிறதோ, என்று அங்கே இருக்கின்ற தமிழர்கள், இது நமது நாடு, நம்முடைய தாய் நாடு என்று வாழ்கின்ற எண்ணங்களைப் பெறுகிறார்களோ அன்றுதான் அங்கேயிருக்கின்ற, இலங்கையிலே இருக்கின்ற சிங்களர்களும் அமைதியாக வாழ முடியும். அந்த நாட்டிலே நீண்ட சமாதானம் நிலவும் என்பதை நாம் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறோம். அங்கே இருக்கின்ற தமிழ் மக்களுக்கு நாம் சொல்லிட ஆசைப்படுகிறோம்.

1950-களில் இந்த உலகம் இருந்ததைப்போன்ற நிலை இன்று இல்லை. 1950-களில் பேரினவாதம் செய்தவர்கள், சிறுபான்மையை நசுக்கிய நாடுகளிலெல்லாம் இன்று சிறுபான்மையை மதிக்கக்கூடிய உணர்வுகள் வளர்ந்திருக்கின்றன. அதைப்போன்ற உணர்வுகள் இலங்கையிலும் வளரும். 1950-களில் ஒரு சாதாரண தேநீர் விடுதியிலேகூட ஒரு நீக்ரோ இளைஞன் அமெரிக்காவிலே நுழைய முடியாது.

ஆஸ்திரேலியாவிலே Aborigines என்று அழைக்கப்படுகின்ற அந்த நாட்டினுடைய பழங்குடி மக்கள் அங்கே இருக்கின்ற கடை வீதிகளுக்குப் போக முடியாது. ஆனால் இன்று காலச்சூழல் மாறியிருக்கிறது. 2009-இல் ஒரு நீக்ரோ இனத்தைச் சேர்ந்த இளைஞன் அமெரிக்க நாட்டினுடைய குடியரசுத் தலைவராக மாறியிருக்கிறார். ஆஸ்திரேலியா போன்ற நாடுகளிலே புறக்கணிக்கப்பட்ட மக்கள்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜூலை 1

இன்று சம உரிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, காலம் மாறியிருக்கிறது.

முற்பகல் 11-10

நமது நாட்டில்கூட 1950 ஆம் ஆண்டில் நடந்த சமூகச் சூழ்நிலை இன்று நிலவுகிறதா என்றால் இல்லை. ஆகவே, இலங்கையிலும்கூட அந்த மாற்றம் வந்திருக்கிறது என்பதைத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். நமக்கு இருக்கின்ற பெரிய வருத்தம் என்னவென்று சொன்னால், ஒரு பெரிய போராட்டத்தினுடைய முடிவிலே, அடுத்த கட்டத்தை ஏந்திச் செல்லுகின்ற தலைவர்கள், அந்த மண்ணிலே இல்லை என்பதுதான் நமக்கு இருக்கின்ற வருத்தம். சுதந்திரப் போராட்டம் முடிந்த பிறகு இந்த நாட்டினுடைய புதிய தலைமையேற்றுக்கொள்வதற்கான மிகப் பெரிய தலைவர்கள் இருந்தார்கள். ஜவஹர்லால் நேரு இருந்தார்; வல்லபாய் பட்டேல் இருந்தார்; அபுல்கலாம் ஆசாத் இருந்தார்; இவர்களையெல்லாம் பார்ப்பதற்கான வழிகாட்டியாக அண்ணல் காந்தியடிகள் இருந்தார்.

திராவிட இயக்கங்களைப் பொறுத்தவரை தந்தைப் பெரியார் அடையாளம் காட்டிய அண்ணா இருந்தார்; அண்ணா மறைந்தபோது, அண்ணா அடையாளம் காட்டிய கலைஞர் இருந்தார்; பேராசிரியர் இருந்தார். ஆனால் இன்று இலங்கைத் தீவிலே தமிழர்களுடைய நெருக்கடி என்னவென்று சொன்னால், அவர்களுக்கு அடுத்தத் தலைமுறைக்கு வழிகாட்டக்கூடிய நல்ல தலைவர்கள் இல்லை என்பது, நமக்கெல்லாம் மிகப் பெரிய வருத்தம். அந்தத் தலைமையை நாம்தான் கொடுக்க முடியும்; அந்த வழிகாட்டுதலை நாம்தான் கொடுக்க முடியும்.

உலகம் முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற பொருளாதார மாற்றங்களில் மிகத் திறமையான தமிழ் இளைஞர்கள் தங்கள் பங்களிப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொன்னால், 30 ஆண்டுகளாக இலங்கையிலே வாழ்கின்ற இளைஞர்களுக்கு சரியான கல்வி இல்லை, சரியான பாதுகாப்பு இல்லை. அந்தக் கல்வியையும், பாதுகாப்பையும் தருவதற்கான சூழ்நிலையை நாம் உருவாக்கிக் கொடுக்கலாம். (குறுக்கீடு) என்ன சார் சொல்கிறீர்கள்? நீங்கள் சொல்லுங்கள் Please சொல்லுங்கள். நீங்கள் disturb செய்தால் நான் எப்படிப் பேசமுடியும்? முக்கியமான விஷயம் பேசிக்கொண்டிருக்கும்போது நீங்கள் எப்படிப் பேசிக்கொண்டிருப்பீர்கள்? நீங்கள் வெளியிலே ஒன்று பேசுகிறீர்கள்; நீங்கள் வெளியிலே serious-ஆகப் பேசுகிறீர்கள்; சபைக்குள்ளே

2009 ஜூலை 1] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]
நாங்கள் serious-ஆகப் பேசும்போது நீங்கள் கிண்டல் பண்ணுகிறீர்கள். இதிலே என்ன அர்த்தமிருக்கிறது? எதையாவது நீங்கள் மறுக்கிறீர்களா? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் அமைதியாக இருங்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அங்குள்ள இளைஞர்களுக்கு நல்ல வாழ்வு கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? அங்கே இருக்கின்ற மக்களுக்கு சிறந்த இருப்பிட வசதிகளைச் செய்துத் தர வேண்டுமென்று நாங்கள் வலியுறுத்துவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? மத்திய அரசு அதற்குப் பங்களிப்பு அளிக்க வேண்டுமென்று காங்கிரஸ் வலியுறுத்துவதை நீங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா? முதலமைச்சர் அதற்குத் துணையாக இருக்க வேண்டுமென்று சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்வதில்லையா? என்ன கிண்டல்? இது எவ்வளவு பெரிய பிரச்சினை? நீங்கள் அவைக்கு வெளியே இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருப்பதைப்போல செயல்படுகிறீர்கள். ஆனால், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக காங்கிரஸ் கட்சி பேச வேண்டிய இடத்திலே பேசினால் அதைக் கொச்சைப்படுத்துகிறீர்கள். அதை எப்படி எங்களால் ஏற்றுக்கொள்ள முடியும்? ஒரு வரலாற்றுத் தவறை சரி செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். தமிழர்களுடைய சரித்திரத்திலே, தமிழர்களுடைய வரலாற்றிலே இலங்கையில் நடந்திருப்பது மிகப் பெரிய வரலாற்றுப் பிழை. அந்த வரலாற்றுப் பிழையைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பு இங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு இருக்கிறது; தமிழகத்தினுடைய தலைவர் என்று நாம் அடையாளம் காட்டுகின்ற தமிழக முதல்வருக்கு இருக்கிறது; இன்று நாம் அமைத்திருக்கிற மத்திய அரசுக்கு இருக்கிறது. அதைச் சொல்லிக் காட்டக்கூடிய உரிமையும், கடமையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது. தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சிக்கு இருக்கிறது. ஆகவேதான் அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காகத்தான் நாங்கள் எழுந்து நிற்கிறோம். இலங்கையிலே வாழ்கின்ற தமிழர்கள் தங்கள் வாழ்வுரிமைகளை மீண்டும் பெற வேண்டும். அந்த வாழ்வுரிமைகளை மீண்டும் பெறுவதற்கான முயற்சியை மத்திய, மாநில அரசுகள் எடுக்கின்ற வேளையிலே, நான் இரண்டே இரண்டு தகவல்களை மட்டும் இந்த அவையிலே பதிவு செய்கிறேன். இரண்டு பேர் எழுதிய கடிதங்கள்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2009 ஜூலை 1

ஒருவர் தமிழர். அவர் யார் என்று சொன்னால், D.B.S. Jayaraj, the Canada-based Sri Lankan journalist, அவர் எழுதி உலகம் முழுவதும் இருக்கின்ற internet—இணையதளத்திலே ஒரு கருத்தைப் பதிவு செய்திருக்கிறார். அந்தக் கருத்தையும் இந்த அவையிலே பதிவு செய்து, அதன்மூலமாக உலகமெங்கும் இருக்கின்ற தமிழர்கள் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர்களுடைய உணர்வுகளை நான் இதன்மூலம் அடையாளப்படுத்த வேண்டுமென்று எண்ணுகிறேன். அவர் எழுதுகிறார்,

"I write this with a lot of sadness, relief and hope, from what has happened in the past few months. As a Tamil, I am proud to be one, I deeply feel that together we can build the burnt bridges and pave a path to peace, happiness, equality and prosperity for us and for the future generations to come...

We have to let go of the past and not react to our feelings in an irrational and selfish way. We talk about the 1953 era, of the riots and how the Tamils were discriminated and treated badly. In 1953, the whole world was a different place and had a different attitude. In America, blacks could not go into a restaurant or a supermarket or attend a white school, the Aborigines in Australia did not have any rights. Now America has a black President, and the Aborigines have equal rights; we, Tamils now have to give it a chance for change to happen in our motherland. We are hanging on to views and ideologies, which formed thirty years ago, which are not appropriate anymore. I think that, in the past 20 years we have created a doubt in the minds of the Sinhalese and the nation making them wonder whether every other Tamil is a Tamil Tiger or not."

இதை எழுதியது, இன்று கனடாவிலே இருக்கின்ற ஓர் இலங்கைவாழ் தமிழர். விவரம் தெரிந்த ஒரு பத்திரிகையாளர். அவர் எழுதிய கருத்து.

*முற்பகல் 11-15*

அதைப்போல, சில அற்புதமான வார்த்தைகளைச் சிங்களர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

"Sri Lanka is a very small country and the Sinhalese are the majority only in Sri Lanka. So we have to be mindful to treat our Tamil brothers

and sisters with respect and give them equal rights and help reconstruct their devastated homes. These acts will soften their attitude towards us. This is a long process and we have to be patient" என்று சொல்லி, வி.கே.பி. ராமநாயகே என்கிற சிங்களர் எழுதியிருக்கிறார். இதைப்போன்ற நல்ல உணர்வுகள் இருக்கின்றன. இந்த நல்ல உணர்வுகளைப் பாதுகாத்து, இலங்கைவாழ் தமிழர்கள் மத்தியிலும், சிங்களர்கள் மத்தியிலும் அமைதி நிலவுவதற்காகவும், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே சிங்களர்களைக் குடியமர்த்தக் கூடாது; அங்கே தமிழர்கள் மட்டுமே இருப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்; அவர்களுடைய கலாச்சாரமும் பண்பாடும் தொன்மையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நீர்த்துவிடுவதற்கு சிங்களப் பேரினவாதம் இடம்கொடுத்துவிடக் கூடாது என்பதையும், அனைத்துத் தமிழர்களுக்கும், அவர்கள் வாழ்ந்த இடங்களிலேயே வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்பதற்காகவும், உடனடியாக மருந்து, உணவுப் பொருட்களை வழங்குவதற்கு நம்முடைய இந்திய அரசு மிகப் பெரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்பதற்காகவும், இந்த அவையிலே வாய்ப்பளித்த உங்களுக்கு நன்றி சொல்லி, அமைகின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட, பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நம்முடைய தொப்புள் கொடி உறவுகளான தமிழினத்தின் வாழ்க்கையில் மீண்டும் புத்துயிரூட்டப்பட வேண்டுமென்று, ஒட்டுமொத்தத் தமிழினத்தின் சார்பில் வைக்கப்படுகின்ற அந்த வேண்டுகோளுக்கு, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், இதை எடுத்துக்கொள்வதற்குப் பெரிய அளவில் உறுதுணையாக இருந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்பொழுது இலங்கையில் தமிழினம் பாதிக்குமேல் அழிக்கப்பட்டு, ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். ஒரே நாளில் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு, இப்பொழுது தமிழினம் அழிக்கப்பட்டுவிட்டாலுங்கூட, அங்கே இருக்கிறவர்கள் நிம்மதியாக வாழ வேண்டும். உரிமை பெற்று வாழ வேண்டும் என்ற அடிப்படையில், தமிழக அரசு என்னென்ன முயற்சிகளை எடுக்க வேண்டும், தமிழக அரசின் வேண்டுகோளை

ஏற்று, இந்திய அரசு எப்படிப்பட்ட வற்புறுத்தலைச் செய்ய வேண்டும், நிவாரணப் பணிகளையெல்லாம் செய்ய வேண்டும் என்ற அடிப்படையிலேதான், இப்பொழுது நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, அங்கே பாதிக்கப்பட்டவர்களுடைய நிலைமையை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். போர் முடிவுற்றது என்று ராஜபக்சே அறிவித்துவிட்டார். போர் முடிவுற்ற நிலையில், இப்பொழுது கம்பி வளையத்திற்குள்ளே அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அகதிகளாக வாழ்ந்துகொண்டிருக்கிற தமிழர்களுக்கு உணவு இல்லை; மருந்து இல்லை; உடை இல்லை; தங்குவதற்கான கூடாரம் இல்லை; பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை; கழிப்பிடங்கள் இல்லையென்று தினந்தோறும் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அப்படி வருவது மட்டுமல்லாமல், பட்டினி கிடந்த காரணத்தால், சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்ற காரணத்தினாலே அங்கே அம்மை நோய் வந்துவிட்டது; மேலும், பல தொற்றுநோய்கள் வந்து தினந்தோறும் குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் ஆகியோர் இறந்து கொண்டிருக்கின்ற செய்தியும் வந்துகொண்டிருக்கிறது. அப்படியொரு செய்திக்கு மாறாக, அடுத்து வரக்கூடிய செய்தி, அங்கே முகாம்களில் தங்கியிருக்கின்ற இளைஞர்கள் கடத்தப்பட்டு, இலங்கை இராணுவத்தாலே படுகொலை செய்யப்படுகிறார்கள் என்ற செய்தி ஒரு பக்கம். மேலும், இளம் பெண்கள் கடத்திச் செல்லப்பட்டு, கற்பழிக்கப்படுகிறார்கள், கொலை செய்யப்படுகிறார்கள் என்ற செய்தியும் வந்து கொண்டிருக்கிறது. இதை நான் சொல்லவில்லை. அங்கிருந்து தப்பி, அகதிகளாக வந்தவர்கள் தங்களுடைய பேட்டியிலே சொல்லக்கூடிய செய்தி. இதைக்கேட்டால், ஒட்டுமொத்த மனித நேயம் படைத்தவர்கள் மனமெல்லாம் பதறுகின்றன. இப்படிப்பட்ட நிலை தொடர்ந்து நிலவிக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே நம்முடைய இந்திய அரசு 500 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறது. வழங்கிய பணம், நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட அந்த உதவி, தமிழர்களை முழுமையாகச் சென்றடைகிறதா என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் இப்பொழுது வணங்காமண் என்று சொல்லக்கூடிய கேப்டன் அலி - கப்பல் அங்கே சென்று, திருப்பியனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கப்பல் இங்கே வந்து, மீண்டும் செல்வதாகச் செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வாக்குறுதி அளித்தார்கள். அந்தக் கப்பலினுடைய நிலைமை என்ன? பொருட்களை வேறு கப்பலிலே மாற்றி அனுப்புவதாகச் செய்தி. ஆகவே, அந்தக் கப்பல் சென்றால் என்ன ஆபத்து வரப்போகிறது?

2009 ஜூலை 1] [திரு. ஜி.கே. மணி]

ஆகவே, ஒட்டுமொத்தமாக இது எதைக் காட்டுகிறதென்று சொன்னால், இந்தியாவிலிருந்து ஆனாலும் சரி, அல்லது தமிழகத்திலிருந்து செல்லக்கூடிய உணவுப்பொருள், நிவாரணப் பொருட்களாக இருந்தாலும்கூட தமிழர்களைச் சென்றடையக்கூடாது என்பதிலே இலங்கை அரசு உறுதியாக இருக்கிறது. அதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்திய அரசின்மூலமானாலும் சரி, அல்லது தமிழக அரசின்மூலமாக இருந்தாலும் சரி, எங்கிருந்து சென்றாலும்கூட, செல்லக்கூடிய உணவும், மருந்தும், உடையும் மற்ற எல்லா நிவாரணப் பொருட்களும் நேரடியாகத் தமிழர்களைச் சென்றடைவதற்கு இந்திய அரசு வழி காணவேண்டும். செஞ்சிலுவைச் சங்கம் என்று சொல்கிறார்கள். அந்த நாட்டினுடைய செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலமாக வழங்கினால் நிச்சயமாக போய்ச் சேராது. ஆகவே, வழங்கக்கூடிய நிவாரணங்கள் அனைத்தும் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின்மூலமாக வழங்கப்பட வேண்டும் என்பதையும் இந்த அவையிலே நான் முன்வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-20*

அது மட்டுமல்ல, நிவாரணம் என்று சொல்லுகிற நேரத்தில், தமிழர்கள் வாழ்ந்த பகுதியில் இப்பொழுது சிங்களர்கள் குடியமர்த்தப்படுகிறார்கள். சிங்களர்கள் குடியேறினால், தமிழர்களை மீண்டும் அழிக்கக்கூடிய நிலை வரும். அதையும் நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தப் போராட்டம், வாழ்வுரிமைப் போராட்டம், ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளுக்கும் மேலாக தந்தை செல்வா காலத்திலிருந்து தொடங்கப்பட்டு, அறவழிப் போராட்டம், சாத்வீகப் போராட்டமாக மாறி, இப்பொழுது போராட்டம் முடிந்தது என்று சொன்னாலும்கூட அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டுமென்பதிலே, தமிழர்கள் மீண்டும் மானத்தோடு வாழ வேண்டும், உரிமை பெற்று வாழவேண்டும் என்பதிலே, தாய் தமிழகத்தினுடைய சட்டமன்றம் இதிலே முழு ஈடுபாடுகொள்ள வேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

அதன் அடிப்படையிலேதான், இப்பொழுது அவர்களுக்கு நிவாரணம், உரிமை என்று சொல்லுகிற நேரத்தில் நம்முடைய அமரர், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களாலே செய்யப்பட்ட ஒப்பந்தம் 1983-லே போடப்பட்ட ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தம்

நிறைவேற்றப்பட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். அதற்குத் தீர்வு ஏற்படவிருக்கிறதா என்பதையும் நாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அதேநேரத்திலே, குறைந்தபட்சம் இந்தியாவிலே இருக்கிற மாநிலங்களுக்கு என்ன அதிகாரங்கள் இருக்கிறதோ, அந்த அடிப்படையிலான குறைந்தபட்ச மாநிலச் சுயாட்சியுடன்கூடிய தமிழ் மாநிலம் அமைவதற்கான உரிமையைப் பெற்றுத் தருவதற்கு நாம் எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று இங்கே வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்குக்கூட செய்தி வந்திருக்கிறது. என்ன செய்தியென்று சொன்னால், என்னதான் நம்முடைய இந்திய அரசு முயற்சி செய்தாலும்கூட, ஐ.நா. அவை முயற்சி மேற்கொண்டாலும்கூட, உலகின் பல நாடுகள் முயற்சியெடுத்தாலும்கூட, ராஜபக்சே கேட்கமாட்டார்; ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று சொல்லப்படுகிறது. அதை நான் சொல்வதிலே ஆதாரம் இருக்கிறது; அதை நம்ப வேண்டியதாகவும் இருக்கிறது. இதற்கு முன்னாலே நாம் தீர்மானம் போட்டோம், இந்திய அரசு சொன்னது, போரை நிறுத்தினார்களா, இல்லை. அதே ராஜபக்சே என்ன சொன்னார்? 'இந்தப் போரை இந்தியாவுக்காக நடத்தினேன்' என்று இந்தியாமீதே பழி போட்டார். வெளிப்படையாக வந்த செய்தி. அவ்வளவு மோசமாக அவர் பேசுகிறார்.

அதுமட்டுமல்லாமல், 'தமிழர்கள் இரண்டாம் தர குடிமக்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும், அப்படியென்றால் வாழுங்கள், இல்லையென்றால் வெளியேறுங்கள்' என்று ராஜபக்சேவின் தம்பி சொல்கிறார். இவ்வளவு மோசமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையிலேதான் இன்று வந்த செய்தி, உலக அளவில், சர்வதேச 7 மனித உரிமை அமைப்புகள் இலங்கை அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றன, அந்த அமைப்புகளுடைய பெயர்களெல்லாம்கூட—அமெரிக்காவிலிருந்து சில அமைப்புகள், இன்னும் வேறு நாடுகளிலிருந்து 7 அமைப்புகள், பொது மன்னிப்பு அவை, அமெரிக்கா, தி கார்டர் சென்டர் இப்படி பல நாடுகள், சுதந்திரம் இல்லம், பன்னாட்டு மனித உரிமைக் குழுமம் என்று 7 அமைப்புகள் அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்குக் கடிதம் எழுதியிருக்கின்றன, வேண்டுகோள் வைக்கின்றன. அதிலே

2009 ஜூலை 1] [திரு. ஜி.கே. மணி]

சொல்லப்பட்டிருப்பது, ** என்ற வேண்டுகோளையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே முன் வைக்க விரும்புகிறேன்.

ஆகவே, ஒட்டுமொத்தமாக நம்முடைய ஐயமெல்லாம், ராஜபக்சே அரசு, சிங்களவாத அரசு எவ்வளவுதான் தமிழர்களுக்கு மீண்டும் உரிமை கொடுக்கிறோம், நாங்கள் பாதுகாக்கிறோம், நிவாரணம் வழங்குகிறோம் என்று சொன்னாலும்கூட, அது ஏற்புடையதாக இருக்குமா என்ற ஐயம்தான் எழுகிறது. ஆன காரணத்தினாலே, அந்த ஐயமெல்லாம் இல்லாத அளவிற்கு நிவாரணப் பொருட்கள் உடனடியாகச் சென்றடைய வேண்டும்; நேரடியாகத் தமிழர்களைச் சென்றடைய வேண்டும்; அதற்கு உணவு, மருந்து, உடை, குடிநீர் என்று எல்லா வகையிலும் செல்வதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்திய அரசும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் அவர்கள் எதிர்காலத்தில் சம உரிமைப் பெற்று, வாழ்வதற்கான அந்த உரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகளையும், ஒட்டுமொத்தமாக தாயகத்துத் தமிழர்கள், உலகம் எங்கும் வாழக்கூடிய தமிழர்களுக்கு நம்பிக்கை உண்டாகுகின்றவகையிலே நடவடிக்கை அமைய வேண்டும். அதற்கு தமிழக அரசு என்ன செய்யப் போகிறது? இதுவரையில் நடந்த அந்தக் குற்றங்களை எல்லாம் நாம் ஏற்றுக்கொள்கிறோமா அல்லது நிராகரிக்கிறோமா? அதற்கு என்ன மாற்று ஏற்பாடு என்பதையும் கவனத்திற்குக் கொண்டுவந்து, ஒட்டுமொத்தமாக நல்ல முடிவாக, அப்படி எடுக்கின்ற முடிவு, வேண்டுகோள் என்பது நிறைவேறக்கூடியதாக இருக்க வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வற்புறுத்தி, அமர்கிறேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் நமது தமிழ் இனம், அந்த நாட்டு அரசின் சார்பிலே படையெடுக்கப்பட்டு, இலட்சம் பேர் உயிரிழந்து இருக்கிறார்கள். மூன்று இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் குற்றுயிரும், கொலையுயிருமாக இருக்கிறார்கள். அகதி முகாம்களில் தங்கியுள்ள அந்தத் தமிழர்களுக்கு உணவு, உடை, குடிநீர் மற்றும் மருந்து இல்லை.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஐ.நா.—வினுடைய பொதுச் செயலாளரே முகாமினுடைய நிலையினைப் பார்த்து, மிகவும் பரிதாபகரமான நிலையில் இருக்கிறது என்பதை இன்றைக்கு வாய்விட்டே சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

உலகத்தில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத சம்பவம் இலங்கையில் நடந்து முடிந்துவிட்டது. மருந்து மற்றும் உணவினைக் கொண்டு சென்ற கப்பல்கூட, நம் தமிழகக் கடலோரத்தில், அந்த வணங்காமண் கப்பல் மருந்து, உணவுப் பொருட்களைச் சுமந்துகொண்டு, இன்னும் நின்று கொண்டிருக்கிறது. அந்தக் கப்பலை இலங்கைக்குக் கொண்டு போய் சேர்ப்பதற்கே பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய ஒரு துர்பாக்கியமான நிலையில், தமிழ்நாடு இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. கப்பல் இலங்கை செல்ல முடியவில்லை. ஆனால், இலங்கையைச் சேர்ந்த ராஜபக்சேவினுடைய சகோதரர் டெல்லியில் இங்கே வந்து பிரதமரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருக்கிற ஒரு நிலையையும், நாம் இன்றைக்குப் பார்த்துக்கொண்டிருக்கின்றோம். உலக நாடுகள் நிவாரணத்திற்காக அளித்த தொகையைக்கூட சிங்களப் பகுதிகளுக்குச் செலவு செய்வதாக இன்றைக்கு தகவல்கள் வந்திருக்கின்றன. இறந்தவர்கள் போக, உயிரோடு இருப்பவர்களையாவது பாதுகாக்க வேண்டியது நம்முடைய கடமையாக இருந்து கொண்டிருக்கிறது.

இதற்கிடையில், இலங்கையில் இன்றைக்கு இராணுவத்தினைப் பலப்படுத்துகின்ற பணியில் ராஜபக்சே அரசு ஈடுபட்டிருப்பதாக தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இருக்கிற உரிமை மேலும் பறிக்கப்படுகின்ற நிலை தொடருகின்றது. உயிரோடு இருக்கின்ற தமிழர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி, கொஞ்சம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது ** சொன்ன வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. தி. இராமசாமி, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) பிறகு வந்து என்னைப் பாருங்கள். அது குறித்துப் பேசிக்கொள்ளலாம்.

**திரு. தி. இராமசாமி:** உயிரோடு இருக்கின்ற தமிழர்கள் மானத்தோடு வாழ வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. ஏற்கெனவே நமது தமிழர்களுடைய நம்பிக்கையாக, தமிழர்கள் பாதுகாப்பிற்குக் கேடயமாக விளங்கியவர்கள் எல்லாம் இன்றைக்குப் போரில்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2009 ஜூலை 1] [திரு. தி. இராமசாமி]

உயிரிழந்துவிட்டதாக தகவல்களைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்றைக்கு இலங்கையில் நமது தொப்புள் கொடி உறவுகள் நிர்கதியாக நின்று கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் மிகுந்த ஒரு மன வேதனையையும் வருத்தத்தையும் அளித்துக்கொண்டிருக்கிறது. இங்கு காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றக் கொறடா பேசினார்கள். ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*முற்பகல் 11-30*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லாத வார்த்தைகளை நான் சொன்னதாக இந்த அவையிலே பதிவு செய்கிறார். அந்த வார்த்தைகளை அவர் சொல்லி பதிவு செய்வதிலே எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், அவர் சொல்ல விரும்பியதை நான் சொல்வதைப்போல, இந்த அவையிலே பதிவு செய்வதை நான் ஆட்சேபிக்கிறேன். அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி சொன்ன அந்த வார்த்தை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. தி. இராமசாமி:** ** என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி, உட்காருங்கள். திரு. இராமசாமி, நீங்கள் மற்ற கட்சிகளைக் குறை சொல்லிப் பேசுவதை அனுமதிக்க முடியாது. ** சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. இராமசாமி, பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஏற்றுக்கொள்ள முடியாது. திரு. இராமசாமி, நீங்கள் கொடுத்திருக்கின்ற சப்ஜெட்டுக்குள்ளே பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்தான் பேசுகிறார், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு. இராமசாமிதான் பேசுகிறார்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இந்த அவையிலே இன்னொரு கட்சியைக் குறை சொன்னால், திரும்பத் திரும்பப் பிரச்சினை வரும். (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். திரு. இராமசாமி, உரையை முடிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லி முடித்து விடுகிறேன். (குறுக்கீடுகள்) எனவே, இன்றைக்கு (குறுக்கீடு). . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இடையூறு செய்யாதீர்கள், உட்காருங்கள். உங்கள் உறுப்பினருக்குள்ள நேரம் முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) பேசச் சொல்லியாகிவிட்டது.

**திரு. தி. இராமசாமி:** இன்னும் ஒரே வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உட்காருங்கள். நீங்கள் திரும்பத் திரும்ப இடைமறித்துப் பேசினால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உங்களுக்கு நான் அனுமதி தரவில்லை, உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .

**திரு. தி. இராமசாமி:** எனவே, இலங்கையில் மீதமிருக்கின்ற தமிழர்கள் மானத்தோடு வாழ்வதற்கும், முகாம்களில் தங்கியிருக்கின்ற தமிழர்களுக்கு உணவு, உடை, மருந்துகள் கிடைப்பதற்கும், அங்கே அவர்களுக்கு சகலவிதமான உரிமைகள் கிடைப்பதற்கான முறையில் அனைத்து உதவிகளையும் இன்றைக்கு தமிழக அரசு செய்வதற்கும் இந்த அவையின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குப் போரில் யார் இறந்துவிட்டார்கள், யார் உயிரோடு இருக்கிறார்கள் என்ற செய்திகூட தெளிவான முறையில் வராத நிலையில்—இறந்துவிட்டார்கள், உயிரோடு இருக்கிறார்கள் அல்லது இன்றைக்குப் புலிகளின் தலைவர் இறந்துவிட்டதற்குப் பிறகு அமைதி என்றெல்லாம், பல்வேறு பீதிகளையெல்லாம் தமிழ்நாட்டில்

2009 ஜூலை 1] [திரு. தி. இராமசாமி]

பரப்பக்கூடிய இந்த நேரத்தில் அங்கேயிருந்து மீண்டும் மானத்தோடு, வீரத்தோடு, உரிமைக்காகப் போராடுவதற்காக தலைவர்கள் உதித்தெழுவார்கள். தமிழகத்தில் இருக்கின்ற மக்களாகிய நாம் அந்த மக்களுக்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்று. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, சீக்கிரம் உரையை முடியுங்கள். அடுத்த issue-வுக்குப் போக வேண்டும். அடுத்து demands-க்கு வேறு போக வேண்டும்.

**திரு. தி. இராமசாமி:** ... கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களின் நிலைகுறித்து, தமிழகத்திலே இருக்கின்ற தமிழர்கள் அல்லாமல் ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

*முற்பகல் 11-35*

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** உலகத்திலே வாழ்கின்ற அத்தனைத் தமிழர்களும் எண்ணியபடி நடக்காமல் போர் முடிவிற்கு வந்திருக்கிறது.

போர் முடிவுக்கு வந்ததற்குப் பின்னால், அங்கே வாழ்கின்ற பூர்வீகக் குடிகளாகிய இலங்கைத் தமிழர்களுக்கு உரிய வாழ்வாதாரம் கிடைத்திட வேண்டும்; அவர்கள் பட்டிருக்கின்ற ஆறா காயங்களுக்கு மருந்துகள் தடவிட வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இன்றைக்கு எதிர்க்கட்சிகள் வரிசையில் இருக்கின்ற தலைவர்கள் தங்களுடைய எண்ணங்களை இங்கே எடுத்துரைத்தார்கள். சட்டமன்றத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, போருக்கு முன்னால் நடந்தது குறித்த கருத்துக்கள் சொல்வதைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். சரி என்று நானும் ஒப்புக்கொண்டதன் காரணமாக, அந்தப் போரில் எந்த அளவிற்கு மனித உரிமை மீறப்பட்டிருக்கின்றது என்பதனை அனைவரும் நன்றாகவே அறிவோம். சரி, யார் பாவம் செய்தார்களோ, அவாள் அவாள் பாவம் அவா அவாளுக்கே போகட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் செய்திருந்தால் நோக்கு, நாங்கள் செய்திருந்தால் நேக்கு.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2009 ஜூலை 1

அந்தப் போரை நிறுத்திட வேண்டும் என்று அனைவரும் அபயக் குரல் எழுப்பினோம். ஆனால் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு யாராலும் முடியாத சூழ்நிலையில் இன்றைக்கு அந்தப் போர் முடிவுக்கு வந்திருக்கின்றது. போர் முடிவுக்கு வந்ததற்குப் பின்னாலும் ஆடு, மாடுகளை அடைக்கின்ற அந்த மந்தைகளுக்குக்கூட வேலிகள் இருக்காது. ஆனால் இன்றைக்கு இலங்கைத் தமிழர்கள் முள் வேலி போட்டு அடைக்கப்பட்டிருக்கின்றார்கள், குற்றுயிருமாக, கொலையுயிருமாக அங்கே அடைக்கப்பட்டிருக்கின்ற அந்தச் செய்திகள் வருகின்றபோது, அவர்களுக்காகக் கண்ணீர் விடுகின்ற தமிழர்களாகிய நாம் பக்கத்தில் இருந்தும்கூட, அவர்களுக்கு எந்தவிதமான உதவிகளும் செய்ய முடியாத, கை கட்டப்பட்ட நிலையில் இங்கே நின்றுகொண்டிருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

வணங்காமண் என்ற கப்பல் சுற்றிச் சுற்றி 4 மாதங்களாகக் கடலிலே பயணித்தபோதும், அதிலே ஏற்றப்பட்டிருக்கின்ற மருந்துகள், காலாவதியாகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டபோதும், அந்த மருந்துகள், நிவாரணப் பொருட்களைக்கூட இலங்கையில் இறக்கிவைக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. மனிதாபிமான முறையில்கூட அந்தப் பொருள்களை அங்கே வழங்குவதற்கு அரசுகள் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாகவே இன்றைக்கு இருக்கின்ற தமிழர்கள் எண்ணுகின்ற ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டிருக்கின்றது.

அங்கே இலங்கைத் தமிழர்கள் போரினால் கைகளை இழந்து, கால்களை இழந்து, அவர்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள்கூட இல்லாத ஒரு சூழ்நிலை நிலவுகின்றது. குடிநீர் இல்லை; அடிப்படை வசதிகள் இல்லை; கழிப்பிட வசதிகள் இல்லை; தொற்று நோய்கள் பரவி, நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்து இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. அப்பாவி இளம் பெண்களை விசாரணை என்ற பெயரில் அழைத்துச் செல்கின்ற இராணுவம் மீண்டும் அவர்களை முகாமிற்குக் கொண்டுவந்து விடுகின்ற சூழ்நிலை இல்லை. அவர்கள் என்ன ஆனார்கள்? கற்பழிக்கப்பட்டார்களா? கொலை செய்யப்பட்டார்களா? உயிரோடு இருக்கின்றார்களா, இல்லையா என்ற தகவல்கூட, மீண்டும் அழைத்துச் செல்லப்பட்டவர்களைப் பற்றி அங்கே உறுதியான தகவல் இல்லாத ஒரு நிலை, இன்றைக்கு இலங்கைத் தமிழர்களுக்கு அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது. அவர்கள் ஏக்கக் கண்களோடுப் பார்க்கிறார்கள். நம்மைக் காப்பாற்ற தொப்புள் கொடி உறவு என்று சொல்கின்றார்களே, அவர்கள் நம்மைக் காப்பாற்ற

2009 ஜூலை 1] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முன்வருவார்களா? எந்த ரூபத்தில் உதவி செய்ய முன்வருவார்கள் என்ற ஏக்கப் பார்வையோடு, போர் முடிவுக்கு வந்து ஒரு மாத காலமாகியும், அவர்களுடைய ஏக்கம் தீர்ந்தபாடில்லை; நம்பிக்கை அவர்களுடைய மனதில் எழவில்லை.

*முற்பகல் 11-40*

அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் ஆளுகின்ற தமிழக அரசும், மையத்திலே ஆளுகின்ற டெல்லி அரசும் இலங்கைத் தமிழர்களை, போரினால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்குரிய நிவாரணங்கள் கிடைப்பதற்கும், அவர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அங்கேயே அவர்களை மீண்டும் குடியமர்த்துவதற்கும் நடவடிக்கை வேண்டும். சில தகவல்கள் வருகின்றன; ஏற்கெனவே குடியிருந்த இலங்கைத் தமிழர்களை முற்றிலுமாக அகற்றிவிட்டு, அங்கே சிங்களவர்களைக் குடியமர்த்துவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டு செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்ற தகவல்களும் வருகின்றன. ஆக, திட்டமிட்டு, இலங்கையில், இலங்கைத் தமிழர் பகுதிகளில் காலங்காலமாக வாழ்கின்ற அந்த இலங்கைத் தமிழர்களை அகற்றிவிட்டு, அந்தப் பகுதிகளில் சிங்களவர்களைக் குடியமர்த்துவது என்றவொரு நிலையையும் இப்போது இலங்கை அரசு எடுத்திருக்கிறது என்ற தகவலும் வருகின்றது. ஆகவே, இனிமேலாவது, மத்திய அரசு இலங்கைத் தமிழர்களை, அவர்களுக்கு அரசியல்ரீதியான தீர்வு, சம உரிமை, சம வாழ்வு, அவர்களுடைய வாழ்வாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கின்ற அளவிற்கு, உறுதிப்படுத்துகின்ற அளவிற்கு, நியாயமான அவர்களுடைய உரிமையைப் பெறுவதற்கு நம்முடைய தமிழக அரசும், மத்திய அரசும் நடவடிக்கை எடுத்தால்தான் வருங்காலச் சரித்திரத்தில், போருக்கு முன்னால் ஏற்பட்டிருந்த, அந்த நம் மேல் இருந்த நம்பிக்கை இல்லாத ஒரு நிலை மாறும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக அரசும், டெல்லி அரசும் உரிய நடவடிக்கை எடுத்து, இனிமேலாவது இலங்கைத் தமிழர்கள் காக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி, எந்த நேரத்திலும் அவர்களுக்கு அங்கே அச்சுறுத்தல் இல்லை, சம உரிமையோடு, சம வாழ்வோடு அரசியல்ரீதியான வாழ்வைப் பெறுகின்ற ஒரு சூழ்நிலையை எடுத்திட வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்

என்ற பெயரால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற வாசகம், "இலங்கையில் போர் முடிவுக்குப் பின்பு தமிழர்களுக்கு வாழ்வுரிமையைப் பெற்றுத் தருவது என்பதோடு, மருந்து மற்றும் உணவு போன்ற வசதிகளை ஏற்படுத்தித் தருவது குறித்து" என்றுதான் இருக்கிறது. இருந்தாலும், இதிலிருந்து கொஞ்சம் விலகிப் போய் வேறு சில கருத்துகளையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள்.

*முற்பகல் 11-45*

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் திரு. கோ.க. மணி அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. இராமசாமி அவர்களும், அகில இந்திய அ.தி.மு.க. சார்பில் திரு. பன்னீர்செல்வம் அவர்களும் இலங்கையிலே போர் முடிந்த பிறகு அங்குள்ள தமிழர்களுடைய வாழ்வுரிமைகளைப் பெற்றுத் தரவும், அல்லற்பட்டுக்கொண்டிருக்கின்ற, நோயால் மடிந்து கொண்டிருக்கின்ற மக்களுக்கு, பசியால் வாடிக்கொண்டிருக்கின்ற மக்களுக்கு, குறிப்பாக மருந்து மற்றும் உணவு போன்ற உதவிகளை ஏற்படுத்தித் தருவது குறித்து தங்களுடைய கருத்துகளை அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கின்றார்கள். நாம் இன்றையதினம் அரசியல் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்து இந்தத் தீர்மானத்தை—சிறப்புக் கவன ஈர்ப்பை அணுகவில்லை.

அதுவரையிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். இல்லாவிட்டால், கடந்த மாதம் என்ன சொன்னீர்கள், இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி—இந்த மாதம் என்ன சொல்கின்றீர்கள் என்றெல்லாம், அரசியல் போராட்டமாக—அந்த அவைக் களமாக, இந்தக் களம் மாறியிருக்கும். அதற்குப் பதிலாக நான் விரும்பியவண்ணம் சட்டமன்றத்தில்—தமிழ்நாடு சட்டமன்றத்தில்—தமிழர்கள் சார்பாக வைக்கப்பட்டுள்ள கோரிக்கை, அச்சுறுத்தல் அல்லது அவசியம் பற்றிய வேண்டுகோள் என்ற நிலையிலேதான் இன்றைய கருத்துகள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழர்கள் சார்பாக விடுக்கப்பட்ட வேண்டுகோள், அறைகூவல் என்ற நிலையில் இந்தப் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும் என்ற நிலையில்தான் இனப் போராட்டம். இது இலங்கையிலே இருக்கின்ற அரசுக்கும்—தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஓர் அரசுக்கும் இடையே நடைபெறுகின்ற வாக்குவாதம் அல்ல, இரண்டு இனங்கள்—அங்கே சிங்கள இனம்—இங்கே தமிழ் இனம்—என்ற இனப் போராட்டம் இது. இந்தப்

போராட்டம் 50 ஆண்டுகளுக்கு முன்பு வெடித்து, மெல்ல மெல்ல சுதந்திரப் போராட்டமாக தந்தை செல்வா அவர்களுடைய காலத்திலே உருவானபோதும், அதற்குப் பிறகு அமிர்தலிங்கம் போன்றவர்கள் அதை வழிநடத்தியபோதும், அதன் பிறகு குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்றவர்கள் வெலிக்கடை சிறைச்சாலையிலே மாண்டு, மடிந்தபோதும், இதுபற்றி இலங்கையிலே உள்ள பெரியவர்கள், தமிழ்ப் பெரியோர், தமிழ்ச் சான்றோர், ஆன்றோர், இவர்களெல்லாம் ஒருங்கு கூடி, நாம் சுதந்திரமாக வாழ, நம்முடைய மொழி அடிமை மொழியல்ல என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையில், தமிழுக்கு இலங்கைத் தீவிலே ஏற்பட்டிருக்கின்ற சீரழிவையெல்லாம் போக்கி, சீர்செய்து, மொழியைச் சீர்செய்வது மாத்திரமல்ல—அங்கேயிருக்கின்ற மக்களும் சீராக வாழவேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த அவர்கள் போராடியபோது—ஒரு பக்கத்திலே தமிழ் ஈழம் தனியாகப் பிரியவேண்டும் என்ற அந்தக் குரலும் எழுந்தது.

இந்தியாவிலே உள்ள அரசியல் கட்சிகள் என்ற முறையில், குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம்—தி.மு.கழகத்தின் குரலை இந்தப் பிரச்சினையில் மாத்திரம் எதிரொலித்த வேறு பல கட்சிகள்—பாட்டாளி மக்கள் கட்சியானாலும்—வேறு பல கட்சிகளானாலும்—இந்தக் கட்சிகளெல்லாம் தமிழ் ஈழத்தைப் பற்றி வலியுறுத்திப் பேசிய நேரத்தில், இந்தியாவினுடைய கட்சிகளில் ஒன்றான, இன்றைக்கு இந்த மன்றத்திலே இடம் பெற்றிருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரையில்—நாங்கள் தமிழ் ஈழம் என்ற பிரிவினைக் கொள்கையை ஆதரிக்கவில்லை—நாங்கள் இலங்கையிலே, தனி நாடு என்ற கொள்கையை அல்ல—மாநில சுயாட்சி என்ற அளவிலேதான்—அங்கே தங்களுடைய கொள்கையை எடுத்துச் சொல்கிறது—இன்றைக்கும் சொல்கிறது என்று வலியுறுத்தினார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சி அதிலே வேறுபாடான நிலையில் இருக்கலாம். அதை இப்பொழுதுதான் நம்முடைய சிவபுண்ணியம் சொல்லவேண்டும்.

ஏனென்றால், இந்திய கம்யூனிஸ்டு கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும்—இரண்டும் ஒன்றாகத்தான் கம்யூனிஸ்டு கட்சி என்கின்ற அந்தத் தலைப்பில் எடுத்து வைத்த வாதம்—அங்கே தனி நாடு பிரிவினையை அல்ல, மாநில சுயாட்சியைத்தான் சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு என்னவோ திடீரென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாட்டில், தமிழ் ஈழம் என்பதை வலியுறுத்தி, வற்புறுத்திப் பேசி வருகின்றார்கள்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

பாட்டாளி மக்கள் கட்சியும் அப்படித்தான் பேசும் என்று எண்ணினேன். ஆனால், இங்கே மணி பேசும்போது, மாநில சுயாட்சி போதும் என்றுதான் பேசினார். அது பதிவாகி இருக்கிறது.

என் மனதில் மாத்திரம் அல்ல—இங்கே பதிவாகின்ற அவைக் குறிப்பிலும் பதிவாகியிருக்கிறது. எடுத்துப் படித்துப் பார்த்தால் அவரே புரிந்துகொள்ளலாம். அதுதான் முடியும் இப்போது. இலங்கையைப் பொறுத்தவரையில், தமிழர்களுக்கு சம உரிமை, தமிழ் மொழிக்கு சம தகுதி, தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு என்று இப்படிப்பட்ட நிலைமைகளுக்காகத்தான் நாம் போராட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*முற்பகல் 11-50*

இனி தமிழ் ஈழத்திற்காகப் போராடுகிறோம் என்று சொன்னால், எங்கள் அண்ணா, திராவிட நாட்டிற்காகப் போராடுவோம் என்று சொல்லி—திராவிட நாட்டுக் கொள்கைக்காக நாங்கள் கடைசி வரையிலே போராடுவோம் என்று கூறி—பிறகு திராவிட நாடு என்ற தனி நாடு கொள்கையை விட்டதற்கான காரணத்தை பெரியதொரு கட்டுரையாக எழுதி, புத்தகமாகவே வெளிவந்திருக்கிறது. அண்ணாவின் கையெழுத்திலேயே அந்தப் புத்தகம் முழுவதும் நிரம்பியிருக்கிறது. ஏன் நான் திராவிட நாடு கொள்கையைக் கைவிடுகிறேன் என்று சொல்ல வந்தவர்—கட்சி வேண்டுமா, திராவிட நாடு வேண்டுமா என்று கேட்டால், கட்சி இருந்தால்தான் திராவிட நாடு கேட்கமுடியும்; ஆகவே, எங்களுக்கு முதலில் கட்சி இருக்கவேண்டும், கட்சியை ஒழிப்பதற்குச் சட்டம் வந்தால், திராவிட நாடா, கட்சியா என்ற அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது அந்த திராவிட நாடு கேட்கின்ற கட்சியாக இருக்கவேண்டுமேயானால்—கட்சிதான் வேண்டும், எனவே, இந்தச் சட்டத்திற்குட்பட்டு நாங்கள் செயல்படுவோம், இயக்கத்தை நடத்துவோம் என்று திராவிட நாடு கொள்கையை, அந்தப் பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டார்கள்.

அப்படிக் கைவிட்டபோது, இதே அவையில் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெரியவர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அதைப் பாராட்டி ஐந்து நிமிடம் பேசினார். "அண்ணாதுரை அவர்கள் திராவிட நாடு கொள்கையைக் கைவிட்டுவிட்டதாக அறிவித்திருக்கிறார். நான் அதைப் பாராட்டுகிறேன், அதைக் கேட்பதற்கும் ஒரு துணிச்சல் வேண்டும்—அதைக் கைவிடுவதற்கும்

2009 ஜூலை 1] [கலைஞர் மு. கருணாநிதி]

ஒரு துணிச்சல் வேண்டும். அந்தத் துணிச்சலைக் காட்டிய திராவிட முன்னேற்றக் கழகத்தை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்" என்றெல்லாம் பக்தவத்சலம் அவர்கள் இங்கே பேசினார்.

நான் ஏன் இதைச் சொல்கின்றேன் என்றால், நாம் மக்களுக்காகத்தான் ஓர் இயக்கத்தை நடத்துகின்றோம். நமக்காக அல்ல. நாம் ஒரு கொள்கையைச் சொல்லிவிட்டு, அந்தக் கொள்கை ஈடேறவேண்டும்; அந்தக் கொள்கை வெற்றி பெறவேண்டும். ஆனால், அந்தக் கொள்கை வெற்றி பெறுவதற்காக நடத்துகின்ற போராட்டமானாலும் அல்லது வேறு பல இயக்கங்களானாலும், அதனால் மக்கள் பாதிக்கப்பட்டால் கவலையில்லை என்றால், பிறகு மக்களுக்காக எதற்கு இந்த இயக்கம் என்பதைக் கேட்காமல் இருக்கமாட்டார்கள். அந்தக் கேள்விக்கு நாம் பதில் சொல்லியாகவேண்டும். பதில் சொல்வது மாத்திரமல்ல, அதற்கான நிவாரணமும் நாம் அளித்தாக வேண்டும். அந்தக் கடமை நமக்கு இருக்கிறது.

மக்களுக்காக—மக்கள் தலைவர்களாகப் புறப்பட்டிருக்கின்ற நாம், மக்களுக்காகச் சொல்லுகின்ற எந்தக் காரியமானாலும், எந்த இலட்சியமானாலும், அது மக்களைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு அமைகிற நேரத்தில், சற்று ஓய்வெடுத்துக்கொண்டு, சிந்தித்து—எப்படிப் போகலாம், எந்த வழியிலே செல்லலாம் என்று தீர்மானிக்க வேண்டும். அதனால்தான் அண்ணா அவர்கள், 'நாங்கள் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிட்டாலும், திராவிட நாடு, பிரிவினையைக் கேட்டதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன' என்று சொன்னார்.

அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று சொல்லி, மத்திய அரசோடு வாதிட்ட காரணத்தால், மத்திய அரசை வலியுறுத்திய காரணத்தால், மத்திய அரசும் நல்ல அரசாக அமைந்து, மாநிலங்களை மதிக்கின்ற அரசாக அமைந்த காரணத்தால், இன்றைக்கு நாம் பெறமுடியாத ஓர் இலட்சியம், தமிழ் மொழி செம்மொழி என்கிற அந்தத் திட்டத்தைப் பெற்றோம் என்றால், மத்திய அரசும், மாநில அரசும் ஒன்றாக இருந்து, ஒரே நிலையில் சிந்தித்த காரணத்தால்தான் ஏற்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி ஒரு நிலைமை இலங்கையிலே வந்தாக வேண்டும். இலங்கையிலே தமிழர்களை மதிக்கின்ற அரசாக ஓர் அரசு அமையவேண்டும். அது, எதிர்காலத்திலே ஜனநாயக அடிப்படையில்,

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

தமிழர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, சிங்களவர்களையும் சேர்த்து ஆளுகின்ற தமிழக அரசாக—தமிழனுடைய அரசாக அமையுமேயானால்—நம்மைப்போல மகிழ்ச்சி அடைபவர்கள் யாரும் இந்த உலகத்தில் இருக்கமுடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் அமைத்தே தீரலாம். ஏனென்றால், இன்றைக்கு அமெரிக்காவைப் பற்றிச் சொல்கிறார்களே, அதைப்போல அமையலாம்.

*முற்பகல் 11-55*

அமெரிக்காவை வெள்ளைத் தோல்தான் ஆள முடியும், அதிபராக இருக்க முடியும் என்ற ஒரு நிர்பந்தத்தை இன்றைக்கு மாற்றியமைத்து, ஒரு கருப்புத் தோல் அங்கே இன்றைக்கு ஆண்டு கொண்டிருப்பதையும், அது என்ன சொல்கிறது என்பதை எதிர்பார்த்து உலகம் கவனித்துக்கொண்டிருப்பதையும் காணும்பொழுது, இலங்கையிலும் தமிழர்கள் அரசு அமைவதற்கு வெகு தூரம் இல்லை என்ற அந்த நம்பிக்கையை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் பெறலாம். அந்த நம்பிக்கையோடு நாம் நம்முடைய கருத்துகளை, நம்முடைய எண்ணங்களை, நம்முடைய திட்டங்களை, நம்முடைய செயல்பாடுகளை அமைத்துக்கொள்ள வேண்டும்.

'ராஜபக்சேயைக் கொண்டு வந்து கூண்டிலே நிறுத்தி விசாரிக்க வேண்டும்' என்று ஒரு தீர்மானம் கொண்டு வந்தோம். அதைக் கருணாநிதி ஏற்றுக்கொள்ளவில்லை, பார்த்தீர்களா, 'ராஜபக்சேயிடம் இவருக்கு இன்னமும் எவ்வளவு மரியாதை இருக்கிறது பார்த்தீர்களா' என்று சொல்லத் தோன்றும். இப்படிச் சொல்லும்போது அவர்களுடைய மனசாட்சியை எடுத்து வெளியே வைத்துவிட்டுத்தான் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். அவர்கள் உண்மையிலேயே அப்படிச் சொல்லவில்லை. அவர்கள் அப்படிச் சொல்ல என்ன காரணம் என்று எனக்குத் தெரியும்.

ஆனால், ஒன்றை மறந்துவிடக் கூடாது. அங்கே நாம் தமிழர்களைக் காப்பாற்ற, அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளமாக ஆக்கப் பாடுபடப் போகிறோமா? அல்லது ராஜபக்சே அவர்களை இங்கே கொண்டு வந்து குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப் போகிறோமா? வாழ்வாதாரத்தைப் பெருக்க வேண்டுமேயானால் இன்றைக்கு அங்கே இருக்கின்ற சிங்கள அரசின்மூலமாகத்தான் அதைச் செய்ய முடியும். இந்திய அரசு அதற்கான வலியுறுத்தலை, வற்புறுத்தலைச் செய்ய வேண்டும் என்பதிலே மாறுபாடான கருத்து இல்லை. இன்னமும் இந்திய அரசு நம்முடைய குரலுக்கேற்ப குரலை உயர்த்தவில்லை

என்பதை இங்கே எப்படி பீட்டர் அல்போன்ஸ் பேசும்போது உணர முடிந்ததோ, அதன்படியே நானும் உணருகின்றேன். பீட்டர் அல்போன்ஸ் பேசும்போது என்ன சொன்னார்? இன்னமும், இந்தப் போர் முடிந்த பிறகும், இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கு முழுமையான சுதந்திரம் கிடைக்கவில்லை, நல்ல வாழ்வு கிடைக்கவில்லை என்று பீட்டர் அல்போன்ஸ் சொன்னால், அது வேறு விஷயம் அல்ல. ஒரே உணர்வுதான். அந்த ஒரே உணர்வோடுதான் நாம் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும், அணுகிக்கொண்டிருக்கின்றோம். இதிலே சிங்களவர்களுடைய கோபத்தை—நம்முடைய பேச்சால்—நம்முடைய நடவடிக்கையால்—ராஜபக்சே என்ற தனி மனிதனைப் பற்றி அல்ல—இங்கே உள்ள தமிழன், அங்கே உள்ள சிங்களவன் என்ற நிலையிலே அவர்களுடைய கோபத்தை—இலங்கையிலே உள்ள புத்த மதத்தைச் சார்ந்த பௌத்தர்கள்கூட நம்மீது இன்றைக்குக் கோபாக்கினியை நிச்சயமாக வீசக்கூடியவர்கள்தான்.

ஆகவே, நம்முடைய தமிழர்களுக்கு நாம் அரசியலிலே மாத்திரமல்ல, எதிலும் ஒரு நீக்குப்போக்கு வேண்டும் என்பார்கள், அந்த நீக்குப்போக்கை மறந்துவிட்டு நாம் இதிலே செயல்பட்டால், அதனால் தமிழர்களுக்குத்தான் வேதனை வந்து சேரும். அங்கே இருக்கின்ற தமிழர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமேயானால், இங்கே நாம் ஆத்திரத்தோடோ அல்லது வெறுப்புணர்வோடோ, அங்குள்ள சிங்கள இனத்தின்மீது ஒன்றைச் சொல்லி, அது வேறுவிதமாக விளைவுகளை உண்டாக்கினால் அது நல்லதல்ல.

இங்கே பேசும்பொழுது சுவையாக இருக்கும். வீரமாகப் பேசலாம். அந்தப் பேச்சுக்கு எத்தனையோ பட்டங்கள் எல்லாம் கிடைக்கலாம். சூறாவளிப் பேச்சு, புயல் பேச்சு—கடலலைப் பேச்சு—எரிமலைப் பேச்சு என்றெல்லாம்கூட அதற்குப் புகழாரங்கள் சூட்டப்படலாம்.

ஆனால் அதே நேரத்திலே அங்குள்ள தமிழனைக் காப்பாற்ற வேண்டிய—இலங்கையிலே உள்ள தமிழனைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது என்பது உண்மையென்றால், சிங்களவர்களுடைய கோபத்தை அதிகமாக ஆக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதைத்தான் நீக்கு, போக்கு என்று சொன்னேன். அதற்காக சிங்களவர்கள் எல்லாம் நமக்கு உறவினர்கள், உற்றார்—அவர்களுக்கும் நமக்கும்கூட தொப்புள் கொடி உறவு உண்டு என்றெல்லாம் நான் சொல்வதாக யாரும் தயவுசெய்து கற்பித்துக்கொள்ளக் கூடாது.

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

நான் இலங்கையின் புராணத்தை, சரித்திரத்தை ஆதி முதல் அந்தம் வரையிலே நன்றாகத் தெரிந்தவன். அப்படித் தெரிந்த காரணத்தால்தான், 16 ஆண்டு காலம் இலங்கையிலே வெள்ளைக்கார சர்க்காரால் சிறையிலே தள்ளப்பட்டு—நாடு கடத்தப்பட்டு, வேலூர் கோட்டையிலே 16 ஆண்டு காலம் மனைவி, மக்களோடு இருந்து அந்தக் கோட்டைக்குள்ளேயே பிணங்களாக ஆனார்களே, அந்தக் கண்டி ராஜா குடும்பத்திற்கு வேலூர் ஆற்றங்கரை ஓரத்தில் முத்து மண்டபம் எழுப்பியதும் நான்தான்—அதையும் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த முத்து மண்டபத்திலே இருக்கின்ற கண்டி ராஜனுடைய கதையை விரிவுபடுத்தி எழுதவும், அப்படி எழுதப்படுகிற நேரத்திலே—அதிலே வருகின்ற பண்டாரக வன்னியனை அதிலே சித்தரித்திருப்பதும், அந்தப் புதினத்தில், கட்டபொம்மனுடைய தளபதி சுந்தரலிங்கத்தை இணைத்திருப்பதும்—நீங்கள் அந்த நாவலைப் படித்திருப்பீர்களேயானால், எந்த உணர்வோடு உள்ளவன் கருணாநிதி என்பதைப் புரிந்துகொள்ள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12-00

அந்த ஒரு புத்தகமே போதும், என்னை யார் என்று தெரிந்துகொள்ள. நீங்கள் படித்தால் தெரிந்துகொள்ளலாம். அந்தப் புத்தகத்தில், கடைசியாக வருகின்ற கதாநாயகன், நான்கைந்து பேர் சுற்றி இருக்கின்ற நேரத்தில், வெள்ளைக்கார சிப்பாய்களிடமிருந்து தப்பித்து ஒரு குதிரையிலே ஏறி ஓடுவான். எங்கே போனான் என்று தெரியாமலே பறந்துவிடுகிறான். கடைசியாக குதிரை ஒன்று போவதுதான் தெரிகிறது. எங்கே போகிறான் என்று தெரியாமலே போகிறான் என்று கதையை முடித்திருக்கின்றேன். இன்றல்ல, 10 ஆண்டுகளுக்கு முன்பே இந்த எச்சரிக்கையோடு கதையை முடித்திருக்கிறேன். இன்றும் அந்தக் கதை நடப்பதுபோலத் தெரிகிறது.

இருந்தாலும், அந்த உணர்வோடு நாம் ஒன்றிப் போய் இருக்கின்ற காரணத்தால், இன்று தமிழகச் சட்டமன்றத்தில் தமிழர்கள் கூடி, சிங்களவர்களிடமிருந்து அங்கே தமிழர்களை எப்படிக் காப்பாற்றுவது, எப்படி அவர்களுக்கு உரிமையைப் பெற்றுத் தருவது என்பதற்காக வாதிட்டோம்—என்பதற்காகப் பேசினோம் என்கின்ற அந்தப் பெருமையை—தனிப் பெருமையை இன்றைக்குத் தமிழர்களாகக் கூடினோம்—இதே பிரச்சினைக்காகப் பல முறை இங்கே தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம். சர்வ கட்சிக் கூட்டங்களை

நடத்தியிருக்கிறோம். அப்போதெல்லாம் தமிழர்களாகக் கூடவில்லை—ஒவ்வொரு கட்சியினராகக் கூடினோம். அதிலே பேதப்பட்டு நின்றோம். அந்தப் பேதங்களையெல்லாம் மறந்து, தமிழர்கள் இன்றைக்குத் தீர்மானம் போட்டிருக்கிறோம். மத்திய அரசு இதுவரையிலே எடுத்திருக்கின்ற இந்த நிவாரண உதவிகள், தமிழக அரசின் சார்பாக வழங்கப்பட்ட நிவாரண உதவிகள் பற்றியெல்லாம் உங்களுக்கெல்லாம் தெரியும் என்றாலுங்கூட, அவைகள் சரியான முறையிலே போய்ச் சேருவதற்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடி, அவர்களும் உதவிட முன்வந்திருக்கிறார்கள் என்றாலுங்கூட—இங்கே வணங்காமண் கப்பலைப் பற்றிப் பேசப்பட்டது.

அந்தக் கப்பலிலே உள்ள பொருள்களை—எந்தக் கப்பலிலே ஏற்றி நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போய்ச் சேர என்ன செய்யலாம்—வணங்காமண் கப்பல் திரும்பிச் செல்லாது—அதிலே உள்ள பொருள்கள் இலங்கைத் தமிழர்களுக்குத்தான் போய்ச் சேரும் என்று எடுத்த முடிவிலே மாற்றம் இல்லை. அந்த முடிவினை எப்படி நிறைவேற்றுவது என்பதற்காக இன்றைக்குக்கூட மத்தியிலே உள்ளவர்கள் பேசிக்கொண்டிக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு—மத்திய அரசு அந்தப் பொருள்களையெல்லாம் கொண்டுபோய் அங்கே சேர்க்கும்—சேர்ப்பது மாத்திரம் அல்ல, தமிழர்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து செயல்பட, இரண்டு, மூன்று தடவை என்னைக்கூட வந்து அங்கே அமைச்சர்களாக இருக்கிற தொண்டமான் போன்றவர்கள் சந்தித்திருக்கிறார்கள்.

நேற்றைக்கு முன்தினம்கூட, தொண்டமானின் மகன், அங்கே அமைச்சராக இருக்கிறார்—அவரும் என்னைச் சந்தித்தார்—நீங்கள் யாராவது குழுவாக வந்து அங்கே பார்க்கலாமே, அனுப்புங்களேன் என்றுகூடக் கேட்டார். அதிகாரபூர்வமாக இல்லாமல் நாங்கள் அங்கே தனியாக வரமுடியாது. மத்திய அரசின் அனுமதியோடு—மத்திய அரசின் கருத்தோடு கலந்துதான் இதைச் செய்ய முடியும் என்று கூறியிருக்கின்றேன். அதற்கு முன்பு, நாங்கள் நம்பிக்கை பெறுகின்ற அளவிற்கு அங்கே தமிழர்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குங்கள்—வாழ்வாதாரத்திற்கு வழி செய்யுங்கள்—அதற்கு உங்களால் முடிந்த துணையை நாங்கள் நாடுகின்றோம் என்று தொண்டமானிடம் சொல்லியிருக்கின்றேன். அவரும் சென்று சொல்வார். அதிலே நல்ல பதில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2009 ஜூலை 1

எல்லாவற்றையும்விட, கடிதங்கள் எழுதினோம்—தீர்மானம் நிறைவேற்றினோம்—அமைச்சரிடம் பேசினோம்—இருந்த அமைச்சர்களை அனுப்பிப் பேச வைத்தோம்—ஏன், நானே போய்ப் பேசினேன்—அனைத்துக் கட்சித் தலைவர்களும் வந்து பேசினார்கள் என்பதையெல்லாம்விட எனக்கு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிற நிகழ்ச்சி, இன்றைக்கு எல்லோரும் தமிழர்களாக இருந்து, இந்தச் சட்டசபையிலே இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறோம் என்பதுதான் எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி என்று கூறி, அமைகின்றேன்.

பிற்பகல் *12-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் நீண்ட விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானம் அவர்களுக்கான, சீரமைப்பதற்கான, அவர்களின் வாழ்வைப் புனரமைப்பதற்கான ஓர் இடைக்கால நிவாரணம் என்ற அடிப்படையிலேதான் இங்கே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே கருத்துகளைச் சொன்னோம். அங்கே இலங்கையில் வாழக்கூடிய தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வு என்று சொன்னால், அது பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிலைப்பாடும் என்று சொல்லப்படுவது தனி ஈழம்தான் தனித் தீர்வு. அதற்கு இடையில் இடைக்கால நிவாரணமாக அந்த மக்கள் வாழ்வதற்காக என்று சொல்லியிருக்கிறோம் என்பதையும் தங்களுடைய கவனத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாநில சுயாட்சி என்று மிக அழுத்தந்திருத்தமாகச் சொன்னது பதிவேட்டிலே பதிவாகி இருக்கிறது. பரவாயில்லை. இப்போது மாற்றிக்கொள்வதனால் தவறு இல்லை.

## (ஆ) நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நெய்வேலி அனல் மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் அ.இ.அ.தி.மு.க. சார்பாக திருமதி செல்வி ராமஜெயம், திரு. ஆர். சின்னசாமி, திரு. செ.ம. வேலுசாமி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. கி. ஆறுமுகம், திரு. தி. வேல்முருகன்